**செ. கு. எண்**:417 **நாள்**:19.11.12

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 19.11.2012

முதன்மைத் துறையான வேளாண் துறையில் உயரிய வளர்ச்சி ஏற்பட்டால் தான் விவசாய பெருமக்களின் வாழ்வு செழிப்படையும் என்பதைக் கருத்தில் கொண்டு, விவசாய உற்பத்தியை பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின் கீழ், சாகுபடி பரப்பை அதிகரித்தல்; பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் பயிர் மேலாண்மையை கடைபிடித்தல்; துல்லிய பண்ணையம் முறையில் காய்கறிகளை பயிரிடுதல்; தோட்டக்கலை பயிர்களுக்கான அடர் நடவு என பல புதிய முன்னோடித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. நுண்ணீர்ப் பாசனத்தை பெருக்கும் வகையில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில், அந்தப் பொருட்களை பாதுகாப்பாக வைக்க ஏதுவாக கிடங்குகள் மற்றும் குளிர்பதன வசதியுடன் கூடிய கிடங்குகள் ஆகியவற்றை கட்டும் பணிகளை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேலும், விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படும் போதெல்லாம், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் ஆதார விலையை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது. காரீப் பருவத்திற்கான நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு சமீபத்தில் நிர்ணயம் செய்த போது, குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண நெல்லுக்கு மத்திய அரசு வழங்கியதைவிட கூடுதலாக 50 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு கூடுதலாக 70 ரூபாயும் எனது தலைமையிலான அரசால் நிர்ணயம் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு கரும்புக்கான நியாயமான ஆதாய விலையை மத்திய அரசு மெட்ரிக் டன் ஒன்றிற்கு 1,450 ரூபாய் என நிர்ணயம் செய்த போது, தமிழக கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துச் செலவு 100 ரூபாய் உட்பட மெட்ரிக் டன் ஒன்றிற்கு 2,100 ரூபாய் என மாநில பரிந்துரை விலையை எனது தலைமையிலான அரசு நிர்ணயம் செய்தது.

**தற்போது, 2012-2013 ஆம் ஆண்டிற்கான கரும்பு பருவத்திற்கு, நியாயமான ஆதாய விலையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு 1,700 ரூபாய் என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளதையடுத்து, மாநில பரிந்துரை விலையாக, போக்குவரத்துச் செலவு 100 ரூபாய் உட்பட மெட்ரிக் டன் ஒன்றிற்கு 2,350 ரூபாய் என நிர்ணயம் செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன்.**

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும், மன மகிழ்ச்சியையும் அளிக்கும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**